உம்முடைய செபம் இறைவனிடம் பறந்துசெல்ல வேண்டுமென்று நீ விரும்புகிறாயா? இரண்டு இறக்கைகளை உருவாக்கு: அவை: உண்ணா நோன்பு, தர்மம்.
- புனித அகுஸ்தினார்

நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் நாம் சுற்றித்திரிகிறோமா? மோசேவும் இஸ்ராயேல் மக்களும் அவ்வாறு தான் இருந்தார்கள். அவர்கள் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் சுற்றித்திரிந்தார்கள் என்று இன்றைய முதல் வாசகத்தில் (இணைச்சட்டநூல்:26: 4-10) வாசிக்கின்றோம். மோசேயின் அந்த நினைவுகள் வாக்களிக்கப்பட்ட நாட்டின் புதிய வாழ்வுக்கு மக்களை தயார் செய்ய தேவையாய் இருந்தது. நிலத்தின் முதற்பலனை ஆண்டவருக்கு காணிக்கையாக்க அவர்கள் கொண்டுவந்த போது, அடிமைத் தளையிலிருந்து மீட்டுவந்த கடவுளின் நீடித்த அன்பையும் இரக்கத்தையும் நினைத்து எப்போதும் நன்றியுணர்வோடு இருக்க மோசே அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.

தவக்காலத்தை தொடங்கும் நாமும் நம்முடைய வாழ்வில் கடவுளின் இரக்கத்தை நினைத்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம். உயிர்ப்பு ஞாயிறுக்கான இந்த ஆறுவாரங்கள் இஸ்ராயேல் மக்களின் 40 ஆண்டுகால தயாரிப்பைப் போல நம்முடைய விசுவாசத்தை ஆழமாக்கவும், தியானிக்கவும், சிந்திக்கவும், புதுப்பித்துக்கொள்ளவும் ஒரு அரிய வாய்ப்பாக அமைகின்றது. விரும்பினால் ஒரு ஆண்டுத்தியானமாககூட இதை நீங்கள் செய்யலாம்.

இன்னும் கூடுதல் உதவியாக, இயேசு பாலைவனத்தில் சோதிக்கப்பட்டதை நாம் எடுத்துக்கொள்ளலாம். இயேசுவோடு அருகில் நடக்க நாம் முயலும்போது, தீயோன் நம்மை தடுத்து நிறுத்துவான் என்று இயேசு நமக்கு முன்னே நடக்கிறார். தீயோன் அவரை சோதித்தபோது, சோதனையில் இருந்து விடுபட இயேசு இறைவசனங்களை முன்வைக்கிறார். நம்முடைய சொந்த முயற்சிகளால் சோதனையில் இருந்து நம்மால் விடுபடமுடியாது என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இயேசு தாம் பாடுபடுவதற்கு முந்தின இரவில் கெத்சமனி தோட்டத்தில் அவருடைய சீடர்களுக்கு கூறியது: “உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால், உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்” என்றார்.(மத்தேயு:26:41)

இரண்டாவது வாசகத்தில் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் (உரோ10:8-13) “வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது” என்று எழுதப்பட்டுள்ளது. எனவே நாம் அப்பத்திற்காக வாழாமல், கடவுளின் வாயில் இருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைக்காகவும் வாழ்வோம்.

இறைவார்த்தையை நம்பி நாம் வாழும்போது, நம்முடைய உள்ளமும் புதுப்பிக்கப்பெற்று மாற்றமடையும்.(உரோமையர்: 12:2).✝

### இன்றைய விவிலிய குறிப்பு:

இணைச்சட்டம்: 26: 4-10;
திபா: 91:1-2,10-11,12-13.14-15
உரோமையர்: 10: 8-13
லூக்கா: 4: 1-13

### வாரம் ஒரு வசனம்

நம்முடைய உள்ளமும் புதுப்பிக்கப்பெற்று மாற்றமடையும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 10/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

10 மார்ச் 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் முதல் ஞாயிறு

திருமுழுக்குப் பெற்று அனுப்பபடுதல்

மாதாந்திர கருப்பொருள்:

## சிலுவையை சுமக்க எங்களுக்குப் பலம் தாரும்





**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
# *திருமுழுக்கு அளித்து அனுப்புதல்*
*2019 மார்ச்சு (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
# *சிலுவையைச் சுமக்க பலப்படுத்துகிறது*

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 1ஆம் ஞயிறு (ஆண்டு 3)** சனி 09-03-2019 - ஞாயிறு 17-03-2019
இ.ச : 26: 4-10 தி.பா: 91 : 1-2, 10-11, 12-13, 14-15 உரோ: 10: 8-13 லூக்கா : 4: 1-13
**“ துன்ப வேளையில் என்னோடு இருந்தருளும், ஆண்டவரே ” - திபா 91**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித சிசிலியா) | |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) புனித யோசேப்பு)<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்)<br>கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்களின் தேர்வுச் சடங்கு மாலை 3 மணிக்கு காஜாங் புனித திருக்குடும்ப தேவாலயத்தில் நடைபெறும் |
| திங்கள் | 11 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 12 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 13 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 14 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 15 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணி திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (அனைத்து மொழிகள்)*** |

**தவக்காலம் 2ஆம் ஞாயிறு (ஆண்டு 3)**
தொ.நூ : 15: 5-12, 17-18, 21 தி.பா: 27 : 1, 7-8, 9, 13-14 பிலிப்: 3: 17-4:1 லூக்கா : 9: 28-36
**“ ஆண்டவரே, என் ஒளி, அவரே என் மீட்பர் ” - திபா 27**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித யோஆன்) | மாலை 7 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (காடோங்)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி படிவம்-1)<br>திருப்பலி (சீ)<br>திருப்பல (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## *2019 மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
அ) 02/03 மார்ச் 2019 ரிம: 11,871.15
ஆ) சமூக அக்கறைப் பணிக்குழுவினருக்கான காணிக்கை: ரிம:7,873.30

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**2) நம் உணவு விடுதியில் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.**
உணவு வாங்க வரும்போது வரிசையில் வரவும்
உணவு உண்டபின் தட்டுகள்/குவளைகள் ஆகியவற்றை அதற்கென வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் வைக்கவும்

3) **எழுப்புதல் - நெகிரி இளைஞர் பேரணி (28-30 ஜுன்)** NUBE போர்ட்டிக்சன் - பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் நடைபெறும். தொடர்பு: சப்ரீனா 013- 288 7624

- **நெகிரி இளைஞர் பேரணி** யின் செலவீனங்களுக்காக, இளைஞர்கள் காலை உணவு விற்பனை செய்கின்றனர். நாள்:10-03-2019 - வாங்கி ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

➢ **2019 தவக்கால ஒப்புரவு அருளடையாளம்**
11/3(திங்) மாலை 7.30: புனித பிரான்சிஸ் சவேரியார், பிஜே
12/3(செவ்) மாலை 7.30: புனித தோமஸ் மூர், பிஜே
மாலை 8.00: கிறிஸ்து ஒளி ஆலயம்,
13/3(புதன்) மாலை 7.30: பிரான்சிஸ் அசிசி, செராஸ்
14/3(வியா) இரவு 8.00: செபமாலை அன்னை ஆலயம்,
இரவு 8.00: புனித அலோசியஸ், மந்தின்
18/3(திங்கள்)இரவு 8.00: குவாடலுப்பே ஆலயம், பூச்சோங்
21/3(வியா) மாலை 7.00: இரக்கத்தின் ஆண்டவர் ஆலயம்,
மாலை 7.30: புனித கிறிஸ்டோபார், கெம்மாஸ்,

➢ **தூதுரைப் பணி ஆண்டு - டி சட்டை - விற்பனை**
உங்களுக்கான டி சட்டையை முன்பதிவு செய்து கொள்ளுங்கள் ரிம;15.00 - ஒன்றின் விலை
2 நிறங்கள் - மெரூன் (அ) வெள்ளை
அளவுகள் XS / S / M / L / XL / 2XL / 3XL
தொடர்புக்கு: டோரீன் (017- 332 6007)

➢ **மரியாயின் சேனை நாள்:**
நாள்: 17/3/2019 (ஞாயிறு) நேரம்: பகல் 1.00 மணி
புனித யோவான் பேராலயம், கோலாலம்பூர்
கோலாலம்பூர் மறை மாவட்ட மரியாயின் சேனையினர் அனைவருக்காகவும் செபிப்போம்.

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித ஜோசப் அதிச வினருக்கு நமது நன்றிகள்

➢ **2019 தவக்கால கருப்பொருள்:** லாவ் டா தோ சி - நம்முடைய அன்னை பூமியான இயற்கையைப் பாதுகாப்போம் நம்முடைய பொது இல்லமான பூமிக்கு அக்கறைக் காட்டுவோம். - கிறிஸ்துவை அறிந்து அவரின் பணியாளார்களாகப் பணி செய்தல்.

➢ **2019 தவக்கால தியானங்கள்: திருமுழுக்கு அளித்துஅனுப்புதல்**
- 12 /3(செவ்) மாலை 6.00 - 10.00 வரை அருட்திரு ஜோன் யாவ்(மலாக்கா) - சீனமொழி
- 23/3 (சனி) பகல் 2.00 - 9.00 வரை அருட்திரு போல் ரோபின்சன்(மட்டகளப்பு இலங்கை) - ஆங்கிலம்
- மார்ச் 24 (ஞாயிறு) காலை 10.00 - 4.00 வரை அருட்திரு போல் ரோபின்சன்(பாட்டிகோலா, இலங்கை)- தமிழ்
- மார்ச் 23/24 (தேமொழி அதிசவினர் மற்றும் மாணவர்கள்) அருட்திரு கிளேரன்ஸ் (ஜோகூர் பாரு) - தேமொழி

➢ **தூதுரைப்பணி ஆண்டு:**
- உங்களின் விண்மீனை மறந்துவிட வேண்டாம்
- தனிப்பட்ட செபத்திற்கு நேரம் ஒதுக்குங்கள்
- இந்த ஆண்டில் ஒரு உருவாக்கப் பயிற்சியிலாவது கலந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்
- நம்பிக்கைக்கு சாட்சி பகரும் வகையில் ஒரு புனிதர் அல்லது விசுவாசமிக்க ஒரு நபரைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்
- தர்மகாரியம்/இரக்க செயலில் ஈடுபடுங்கள்
- நீலாய், புனித திரேசா ஆலயத்திற்கு புனித யாத்திரை செல்லுங்கள் (கூடுதல் விவரங்கள் விரைவில்)

➢ **சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழுவினரின் கோல்ஃப் விளையாட்டுப் போட்டி**
நெகிரி செம்பிலான் பணிக்குழுவினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:06-04-2019 காலை 7.00 மணி. சிரம்பான் இண்டர்னேஷனல் கோல்ஃப் கிளப் (SIGC). நபர் ஒருவருக்கு கட்டணம் ரிம:250/- (காலை உணவு/பகல் உணவு/பரிசுப்பை உள்ளடக்கியது.) மற்றும் கண்கவர் பரிசுகள். கோல்ஃப் விளையாடும் அனைவரையும் இதில் கலந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்புக்கு: தயாளன் (017- 8809 454) கிறிஸ்டோபர் கே (019-6216 194)

➢ **உங்களுடைய எஸ்.பி.எம் /எஸ்.டி.பி.எம். முடிவுகளுக்குப் பின் அடுத்தது என்ன?**
உங்களுடைய அடுத்த கட்டத்தை நிர்ணயிக்க இந்த உரையாடலில் வந்து கலந்துகொள்ளுங்கள். இந்த ஆண்டு படிவம் 5/6 பயிலும் மாணவர்கள் மற்றும் தேர்வு முடிவுகளை எதிர்நோக்கி இருக்கும் அனைவரையும் அழைக்கிறோம். நாள்: 17-03-2019(ஞாயிறு) காலை 8.30 -9.30 வரை மற்றும் 10.30-12.00 வரை (இரண்டு உரைகள்) இடம்: மினவுதம் மாதா தேவாலய மண்டபம், தொடர்புக்கு கிறிஸ்டோபர் (010-2312 5825) /நாதன் (012- 684 0750

➢ **கேளிக்கை சந்தை:** விசிடேஷன் சூப் கிச்சன் குழுவினர் ஏழை மக்களுக்கு உதவி செய்ய நிதிதிரட்டும் பொருட்டு இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:23/24 & 30/31 மார்ச் 2019. உங்களிடம் உள்ள பயன்படுத்திய/புதிய துணிகள், புத்தகங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் (நல்ல நிலையில் உள்ளவை, விற்பதற்கு ஏற்ற முறையில் உள்ளவை) ஆகியவற்றை தந்து உதவவும். பொருட்களை சேர்க்கும் இடம்: ஆலய உணவு விடுதிக்கு முன்.
செவ்வாய் மார்ச் 5,12,19 (காலை 8.00 - 12.00 வரை)
சனி மார்ச் 9 & 16 (காலை 10.00 - 12 .00 வரை)
ஞாயிறு மார்ச் 10 & 17 (காலை 8.00 - 11.00 வரை)

- **அருட்திரு ஜோர்ஜ் அவர்கள் வத்திக்கான்** (உரோமை) மாநாட்டில் கலந்துகொள்கிறார் மார்ச் 5- 11 வரை.
- **குருக்களின் மாதாந்திர தியானம்** - 19 & 20 மார்ச் APC, கோலாலம்பூர்
- **மினவுதல் தேவாலயத்தில் தவக்கால ஒப்புரவு அருளடையாளம்:**
  01/04/2019 (திங்கள்) மாலை 6.00 மணி திருப்பலி- ஒப்புரவு அருளடையாளம்